மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.01/2021
அ.வ.எண்.286/2015

மாதப்பன் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

ரத்தினசாமி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 19.11.2021–ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.பி.பாலமுருகன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.ஏ.எம்.சி.பெரியசாமி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் இருந்து வந்த இம்மனுவில் இருதரப்பு வாதுரை முன்னிலைப்படுத்தாத நிலையில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் இ.ம.எண்.363/2016யை திறக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுவின் சுருக்கம்

இ.ம.எண்.363/2016ல் திரு.எம்.பி.செந்தில்குமார் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டு, அவருடைய கட்டணம் ரூ.3500 என நிர்ணயம் செய்யப்பட்டதை மனுதாரர் செலுத்தியுள்ளார். நீதிமன்ற ஆணையாளர் அதன்படிக்கு அறிவிப்பும் கொடுத்தார். ஆனால் கிராம நிர்வாக அலுவலர், அளவையர் வேறு காரணங்களால் ஆணையாளர் பணியை முடிக்க இயலவில்லை. மனுதாரர் ஆணையாளர் பணியை முடிக்க ஒத்துழைப்பு கொடுத்து வந்தார்.மனுதாரரால் எவ்வித காலதாமதமும் ஏற்படவில்லை. இந்நிலையில் இ.ம.எண்.363/2016 கடந்த

17.09.2021ல் முடிக்கப்பட்டது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையானது இவ்வழக்கிலுள்ள பிரச்சனையை தீர்க்க உறுதுணையாக இருக்கும் என்பதால் இ.ம.எண்.363/2016 யை திறக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுதாரர் தாவாசொத்தை பார்வையிட பௌதீக தன்மை குறித்து இ.ம.எண்.363/2016 ல் மனு தாக்கல் செய்தது உண்மை. ஆனால் நீதிமன்ற ஆணையாளரை அழைத்து செல்ல மனுதாரர் தரப்பில் குறிப்பாணை வழங்கியதாக எந்த ஒரு ஆவணத்தையும் இம்மனு பிரமாணப்பத்திரிக்கையில் சமர்ப்பிக்கவில்லை. எந்தெந்த தேதிகளில் நீதிமன்ற ஆணையாளரிடம் மனுதாரர் தல ஆய்வு செய்திட வேண்டுமென கோரியதாக மனுதாரர் அபிடவிட்டில் குறிப்பிடவில்லை. இவ்வழக்கு சிறப்பு விசாரணைக்காக வாய்தா பிறப்பிக்கப்பட்ட தேதியில் கூட சிறப்பு விசாரணையிலிருந்து நீக்க கோரி மனுதாரர் மனு செய்யவில்லை. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/வாதி கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இ.ம.எண்.363/2016 ல் திரு.எம்.பி.செந்தில்குமார் வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டு, அவருடைய கட்டணம் ரூ.3500 என நிர்ணயம் செய்யப்பட்டதை மனுதாரர் செலுத்தியுள்ளார் எனவும், நீதிமன்ற ஆணையாளர் அதன்படிக்கு அறிவிப்பும் கொடுத்தார் எனவும், ஆனால் கிராம நிர்வாக

அலுவலர் மற்றும் அளவையர் வேறு காரணங்களால் ஆணையாளர் பணியை முடிக்க இயலவில்லை எனவும், மனுதாரர் ஆணையாளர் பணியை முடிக்க ஒத்துழைப்பு கொடுத்து வந்தார் எனவும், மனுதாரரால் எவ்வித காலதாமதமும் ஏற்படவில்லை எனவும், இந்நிலையில் இ.ம.எண்.363/2016 கடந்த 17.09.2021ல் முடிக்கப்பட்டது எனவும், நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையானது இவ்வழக்கிலுள்ள பிரச்சனையை தீர்க்க உறுதுணையாக இருக்கும் என்பதால் இ.ம.எண்.363/2016 யை திறக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்/பிரதிவாதி மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர் தாவாசொத்தை பார்வையிட பௌதீக தன்மை குறித்து இ.ம.எண்.363/2016ல் மனு தாக்கல் செய்தது உண்மை எனவும், ஆனால் நீதிமன்ற ஆணையாளரை அழைத்து செல்ல மனுதாரர் தரப்பில் குறிப்பாணை வழங்கியதாக எந்த ஒரு ஆவணத்தையும் இம்மனு பிரமாணப்பத்திரிக்கையில் சமர்ப்பிக்கவில்லை எனவும், எந்தெந்த தேதிகளில் நீதிமன்ற ஆணையாளரிடம் மனுதாரர் தல ஆய்வு செய்திட வேண்டுமென கோரியதாக மனுதாரர் அபிடவிட்டில் குறிப்பிடவில்லை எனவும், இவ்வழக்கு சிறப்பு விசாரணைக்காக வாய்தா பிறப்பிக்கப்பட்ட தேதியில் கூட சிறப்பு விசாரணையிலிருந்து நீக்க கோரி மனுதாரர் மனு செய்யவில்லை எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/வாதி கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கானது சிறப்பு பட்டியலுக்காக வாய்தா போடப்பட்டுள்ளதால் சிறப்பு பட்டியலிலிருந்து நீக்க மனுதாக்கல் செய்யாமல் இம்மனுவினை தாக்கல் செய்ய முடியாது என கட்சி செய்துள்ளபோதும், மனுதாரர்/வாதி தரப்பில் கடந்த 23.10.2021ல் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக 02.11.2021ல் வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. மனுதாரர்/வாதி தரப்பில் ஏற்கனவே வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சிறப்பு பட்டியலிலிருந்து நீக்குவதற்காக மனுதாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பதால் எதிர்மனுதாரரின் கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது

(iv) இருதரப்பிலும் இ.ம.எண்.363/2016 ல் நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டார் என்பதையும், அவர் தற்போது வரை வழக்கு சொத்தை பார்வையிடவில்லை என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளனர். வழக்கு ஆவணங்களிலிருந்து கடந்த 11.01.2018 ல் நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளதும், 3 1/2 ஆண்டுகளாக நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை தாக்கல் செய்யாததால் கடந்த 17.09.2021 ல் மேற்படி மனு முடிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் இ.ம.எண்.363/2016 இருதரப்பு விசாரணைக்கு பின்னிட்டு தகுதியின் அடிப்படையில் அனுமதித்து நீதிமன்ற ஆணையாளர் பார்வையிட வேண்டுமென உத்தரவிட்டுள்ளதால் மேற்படி மனு முடிக்கப்பட்டதால் இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்மானிக்க முடியாத சூழ்நிலை உள்ளதால் இ.ம.எண்.363/2016 யை திறக்க வேண்டுமென உத்தரவிடுவது நீதிக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஏற்கனவே 3 1/2 ஆண்டுகளாக நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை தாக்கல் செய்யாததால் வழக்கு நடத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் நீதிமன்ற ஆணையாளர் தன்னுடைய அறிக்கையை ஒரு மாதத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும் எனவும், அதற்காக மனுதாரர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்பட்டும், நீதிமன்ற ஆணையாளர் இ.ம.எண்.363/2016 ல் தன்னுடைய அறிக்கையை ஒரு மாதத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும் எனவும், அதற்கான நடவடிக்கையை மனுதாரர் எடுக்க வேண்டும் எனவும், அவரவர் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம்

ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.